International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# குறிஞ்சி நில மக்களின் உணவுப் பண்பாடு

**சே. ஆனந்த ஷைனி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
**முனைவர் சௌ. கீதா**
முதல்வர், நெறியாளர்
அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
காரிமங்கலம், தர்மபுரி

**முன்னுரை**

மனிதர்கள் தங்களது வாழ்வை நிலத்தின் சூழலுக்கு ஏற்றவாறு வாழ்ந்து வந்தனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை என்ற ஐந்து நிலத்தின் வாழ்க்கையையும் சங்க இலக்கியம் விரிவாக கூறுகிறது. மனிதன் உயிர்வாழ அடிப்படை தேவைகளில் முதன்மையானதும், முக்கியமானதும் உணவு. எனவே இக்கட்டுரையில் குறிஞ்சி நிலமக்களின் உணவு பண்பாடு குறித்து விவரிக்கப்பட்டுள்ளது.

**குறிஞ்சி நிலம்**

தொல்காப்பியர் நிலத்தை நான்காக பகுத்துக் காட்டியுள்ளார்.

> **"மாயோன் மேய காடுறை உலகமும்**
> **சேயோன் மேய மைவரை உலகமும்**
> **வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
> **வருணன் மேய பெரு மணல் உலகமும்**
> **முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என**
> **சொல்லிய முறையான் சொல்லவும் படுமே"** (தொல்காப்பியம், பொருள், அகம்-5)

என்னும் வரிகளின் மூலமாக அறிய முடிகிறது.

குறிஞ்சி நிலம் என்பது மலையும் மலை சார்ந்த இடமும் ஆகிய இயற்கை பகுதியாக உள்ளது. இப்பகுதியில் வாழ்கின்ற மக்கள் இயற்கையோடு கூடிய வாழ்க்கையை வாழ்கின்றனர்.

**தேன்**

தேன் மலைவாழ் மக்களின் உணவுகளில் மிக முக்கியமான பங்கு வைத்து இருந்துள்ளது.

> **"அறையுறு தீந்தேன் குறவர் அனுப்ப"** (அகம்-322:12)

குறிஞ்சி நில மக்கள் மலைப்பகுதியில் உள்ள தேனை எடுத்து உண்டனர் என்பதை,

> **"பெருந்தேன் கண்ட இருக்கை முடவன்"** (குறுந்தொகை-6)

என்னும் வரிகளால் அறிய முடிகிறது.

**கள்**

கள் குடிக்கும் பழக்கம் குறிஞ்சி இன மக்களிடம் இருந்துள்ளது. தங்களுக்கு தேவைப்படுகிற கள்ளை தாங்களே தயாரிக்கும் பழக்கமும் இருந்து உள்ளது.

> **"பாப்புக் கடுப்ப அன்ன தோப்பி வான்கோட்டு**
> **கடவுள் ஓங்குவரைக்கு ஓங்கி குறவர்**

**முறித்தழை மகளிர் மடுப்ப மாந்தி**
**அடுக்கல் ஏனல் இரும்புனல் மறந்துழி"**
(அகம்:348:7-10)

குறவர்கள் கனிகளுடன் பலாப்பழத்தின் சுளையையும் தேனையும் கூட்டாக்கிய கள்ளினை மூங்கிற்குழாயில் அடைத்து வைப்பர். அவர்களின் இஷ்ட தெய்வத்திற்கு படைத்து மகிழ்து பின் அவர்கள் பருகி வேங்கை கூத்தாடி மகிழ்ந்தனர் என்பதை

**"கல் அகத்து எம் ஊரே, செல்லாது**
**சேந்தனை, சென்மதி நீயே பெருமலை**
**வாங்கு அமைப்பழுகிய நறவு உண்டு"**
(நற் 276)

நற்றிணை பாடல்வழி அறிய முடிகிறது.

மனமகிழ்ச்சியோடு இருக்கும் போது அதனை வெளிப்படுத்தும் விதமாக கள்ளுண்டு குரவையாடினர் என்பதை மலைபடுகடாம் பாடல் வரிகளின் மூலம் அறியலாம்.

**"நறவு நாட் செய்த குறவர் தம்பெண்டிரொடு**
**மான்தோர் சிறுபறை கறங்க கள்ளென**
**வான்தோய் மீமிசை அயரும் குரவை"**
(மலை 320-322)

கள் அருந்துவதற்கு பனக்குடை பயன் படுத்தப்பட்டுள்ளது.

**பலா**

முக்கனிகளில் ஒன்றான பலா குறிஞ்சி நில மக்களின் உணவில் தவிர்கக முடியாத ஒன்றாக இருந்துள்ளது.

**"பல்கோள் பலவின் பயிர்ப்பு உறு தீங்கனி**
**அல்கு அறைக் கொண்டு ஊன் அமலைச் சிறுகுடி"** (கலி.50:12-13)

என்னும் கலித்தொகை பாடலின் மூலம் அறியமுடிகிறது.

வேரிலேயே பலாப்பழத்தை கொண்டிருக்கும் பலா மரங்கள் அதிகம் இருந்துள்ளது. இவற்றின் பழங்களை குறிஞ்சி நில மக்கள் அதிகமாக விரும்பி உண்டனர். இதனை,

**"யார் அஃது அறிந்திசி னோரே சாரல்**
**சிறுகோட்டு பெரும்பழம் தூங்கி"** (குறுந்-8)

என்ற வரிகளின் முலம் அறியலாம்.

**கிழங்கு**

கிழங்குகளை குறிஞ்சி நில மக்கள் உணவுக்காக பயன்படுத்தினார்கள், இதனை

**குன்றத்து பழங்குழி அகழ்ந்த கானவன்**
**கிழங்கினொடு** (குறுந்-379)

என்னும் குறுந்தொகை வரிகள் குறிப்பிடுகிறது.

**"கானவன் எய்த முளவுமான் கொழுங்குறை**
**தேம்கமழ் கதுப்பின் கொடிச்சி கிழங்கொடு**
**காந்தள் அம் சிறுகுடி பகுக்கும்"** (நற்றிணை-85)

கிழங்கோடு பன்றியின் கொழுத்த தசைப் பகுதியை சேர்த்து பலருக்கும் பகுத்து கொடுத்து உண்டார்கள் என்பதில் இருந்து இவர்களது உணவில் கிழங்கு முக்கிய இடம் பெறுகிறது என்பதை அறிய முடிகிறது.

**மூங்கில் நெல்**

குறிஞ்சி நில மக்கள் திணைகளை உரலில் இட்டு தூய்மை செய்து பயன்படுத்தினர். தினைக் கதிர்களை உரலில் இட்டது போலவே மூங்கில் நெல்லையும் குத்தினர் என்னும் பழக்கத்தினை,

**"பாடுகம் வாவாழி, கோழி, வயக்களிற்றுக்**
**கோடு உலக்கை ஆகநெல் சேம்பினி இலைகளா**
**ஆடுகழை நெல்லை அறைஉரலுள்பெய்து இடுவோம்"** (கலி.41:1-3)

என்னும் கலித்தொகை பாடல்வழி அறியமுடிகிறது.

**திணை**

மலையிலும் அதன் அடிவாரத்திலும் குறிஞ்சி நில மக்கள் வாழ்ந்து வந்தனர். தங்களது தேவைக்காக தோட்டத்திலேயே திணையை விளைவித்தனர். இதனை,

**"சிறுதிணை விளைந்த வியன்கண் இரும்புனத்து**
**இரவுஅரி வாரின் தொண்டகச் சிறுபறை"**
(குறுந்-375)

என்னும் குறுந்தொகை பாடல் உணர்த்துகிறது.

**"குறப்பெண் மெல்லிய திணைமாவை உண்பதினை**
**பின் இருங் கூந்தல் நல்நுதற் குறமகள்**
**மென்திணை நுவணை உண்டு"** (ஐங்-285)

என்னும் பாடல்வழி திணை குறிஞ்சி நிலத்தவரின் உணவாகப் பயன்படுத்தியு ள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

**முடிவுரை**

சங்க இலக்கியத்தில் குறிஞ்சி நில மக்கள் நிலம் சார்ந்த வாழ்வியலை மேற்கொண்டு வாழ்ந்தனர். இம்மக்களின் உணவின் வழி பண்பாட்டு உணர்வையும், மக்களின் வளர்ச்சி நிலையினையும் இக்கட்டுரை எடுத்துறைக்கிறது.

**துணைநூற்பட்டியல்**

1. புலியூர் கேசிகன், நற்றிணை
2. ச.வே.சுப்பிரமணியன், குறுந்தொகை
3. ச.வே.சுப்பிரமணியன், ஐங்குறுநூறு
4. புலியூர்கேசிகன் உரை தொல்காப்பியம் மூலமும் உரையும்
5. கபிலர், குறிஞ்சிப்பாட்டு, பாரி நிலையம், சென்னை
6. சங்க இலக்கிய ஆசிரியக்குழு கலித்தொகை
7. ச.வே.சுப்பிரமணியன், மலைபடுகடாம்
8. ச.வே.சுப்பிரமணியன், அகநானூறு